DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 35/2019 Crime No. 56/2019 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-13/LW12- வடிவேல் குமார் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

1) நான் தற்பொழுது கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் பவானி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 07.02.2019 ம் தேதியன்று, நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராஜன் என்பவர் நிலைய குற்ற எண்.56/2019, ச/பி இதச 294(b), 324, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை பெற்ற நான் அன்றைய தினம் இரவு 19.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான மூர்த்தி மற்றும் அய்யாசாமி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2) பின்னர் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்திலிருந்து கட்டிங் பிளேயர் ஒன்றினையும் மற்றும் கல் ஒன்றினையும், சுமார் 16 அடி நீளமுள்ள கருப்பு நிற கேபிள், அதனுன் மஞ்சள் சிவப்பு மற்றும் புளூ கலர் ஒயர்கள் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் கைப்பற்றிய வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள், இருசாள், பூஸ் (எ) அய்யம்மாள், அய்யம்மாள், க/பெ.தொப்பநல்லாகவுண்டர், பழனியம்மாள், பாலமுருகன், முத்துசாமி, தொப்பநல்லாகவுண்டர், மூர்த்தி மற்றும் அய்யாசாமி ஆகியோர்களை விசாரித்து தனித் தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்னர் அன்றைய தினம் இரவு 22.30 மணிக்கு மயிலம்பாடி கொண்டிரெட்டிப்பாளையம் பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்த எதிரிகள் மோகன் மற்றும் சிவக்குமார் ஆகியோர்களை விசாரிக்க குற்றத்தை ஒப்புக் கொண்டவர்களை 23.00 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி முறைப்படி கைது செய்தும், நிலையம் அழைத்து வந்த திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.அகல்யா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்றிதழ் பெற்றேன். மருத்துவரின் காயச்சான்று சாதாரண காயம் என்று சான்று வழங்கியிருந்ததாலும், வாதியை, எதிரி கையால் அடித்ததாக தெரிய வந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச 294(b), 324, 506(ii) ஆகிய பிரிவுகளிலிருந்து இதச 294(b), 323, 324, 506(ii) ஆகிய பிரிவுகளின்

கீழ் சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து 09.03.2019 ம் தேதியன்று எதிரிகள் இருவர் மீது இதச 294(b), 323, 324, 506(ii) ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் புகார்தாரர் காவல் பணியில் உள்ள ஒரு காவலர் என்று சொன்னால், சரிதான். இந்த வழக்கின் வாதி மற்றும் எதிரிகளுக்கு இடையே நிலம் சம்பந்தமாக முன்விரோதம் இருந்ததை எனது புலன் விசாரணையில் தெரிந்து கொண்டேன். இந்த வழக்கில் சான்று பொருட்கள் ஏதேனும் சம்பவயிடத்தில் இருந்து எடுத்து நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால், ஒப்படைத்துள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஒரு தனி நபருக்கு பாத்தியப்பட்ட இடம் என்று சொன்னால், சரிதான். நான் கூறுகிறேன் இந்த வழக்கின் வாதி எதிரி மீது இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு மிகைப்படுத்தி எதிரி மீது கொடுத்த பொய்யான புகாரை நான் சரிவர விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரி மீது ஒரு பொய்யான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. நீங்கள் சொன்னவாறு, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைறெவில்லை என்று சொன்னால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 35/2019 Crime No. 56/2019 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-12/LW13- சந்திரபாபு | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 25.06.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை-**

நான் பவானி காவல் நிலையத்தில் பணியாற்றி, நீதிமன்ற சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். பவானி காவல் நிலைய குற்ற எண்.56/2019, (CC.No.35/2019) என்ற வழக்கின் 1ம் எதிரி மோகன், அம்மாபேட்டை காவல் நிலைய குற்ற எண்.265/2024 என்ற வழக்கில் கோபி மாவட்ட மத்திய சிறையில் உள்ளார். ஆகையால் அவரை இவ்வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த PT Warrant வழங்க உத்தரவிடுமாறு இந்த நீதிமன்றத்தில் தாழ்மையுடன் பிரார்த்தித்துக்கொள்கிறேன். இந்த சாட்சி மூலமாக நீதிமன்றத்திற்கு கொடுக்கப்பட்ட பவானி காவல் ஆய்வாளர் வழங்கிய **வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**